கடந்தாண்டில் உலகத்தின் நிலைமை மோசம்

53 நாடுகளில் 29.5 கோடி மக்கள் பட்டினி

ஐ.நா அறிக்கையில் பகீர்

நியூயார்க், மே 17-

கடந்தாண்டில் உலகளவில் 53 நாடுகளில் 29.5 கோடி மக்கள் பட்டினியை எதிர்கொண்டதாக ஐ.நா அறிக்கையில் பகீர் தகவல் வெளியாகி உள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பு வெளியிட்டுள்ள உலக உணவு நெருக்கடி அறிக்கையில், 'கடந்த 2024ம் ஆண்டில் உலகளாவிய பட்டினி நிலைமை மோசமடைந்துள்ளது. உலகம் முழுவதும் 53 நாடுகளில் 295 மில்லியன் (29.5 கோடி) மக்கள் தீவிர பட்டினியை எதிர்கொண்டனர்.

கடந்த 2023ம் ஆண்டை காட்டிலும் 13.7 மில்லியன் மக்கள் அதிகமாக பட்டினியை எதிர்கொண்டனர். உலகம் முழுவதும் ஆறாவது ஆண்டாக தொடர்ந்து உணவு பாதுகாப்பின்மை மற்றும் குழந்தைகளின் ஊட்டச்சத்து குறைபாடு உயர்ந்துள்ளது. உலகளாவிய மோதல்கள், காலநிலை மாற்றத்தால் ஏற்படும் தீவிர வானிலை, பொருளாதார நெருக்கடிகள் மற்றும் 95 மில்லியன் மக்களை பாதித்த கட்டாய இடப்பெயர்வு ஆகியவை பட்டினி கொடுமைக்கு முக்கிய காரணங்களாகும். குறிப்பாக காசா, சூடான், தெற்கு சூடான், ஹைதி மற்றும் மாலி போன்ற பகுதிகளில் பேரழிவு அளவிலான உணவு பாதுகாப்பின்மை பதிவாகியுள்ளது, சூடானில் பட்டினி உறுதி செய்யப்பட்டுள்ளது. கடந்தாண்டு 1.9 மில்லியன் மக்கள் உணவு பஞ்சத்தை எதிர்கொண்டனர்.

கடந்த 2016ம் ஆண்டு உணவு கண்காணிப்பு தொடங்கியதிலிருந்து மிக அதிகளவில் பட்டினி எண்ணிக்கை பதிவாகி உள்ளது. குழந்தைகளிடையே ஊட்டச்சத்து குறைபாடு தொடர்ந்து அதிகரித்து, 38 மில்லியன் குழந்தைகள் தீவிர ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆப்கானிஸ்தான், கென்யா, உக்ரைன் போன்ற 15 நாடுகளில் மனிதாபிமான உதவிகள் மற்றும் மேம்பட்ட விவசாய உற்பத்தி மூலம் உணவு பாதுகாப்பு சற்று முன்னேற்றம் கண்டாலும், நைஜீரியா, சூடான், மியான்மர் போன்ற மோதல் பாதித்த பகுதிகளில் நிலைமை மோசமடைந்துள்ளது. உள்ளூர் உணவு அமைப்புகளில் முதலீடு செய்வது மற்றும் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து சேவைகளை மேம்படுத்துவது இந்த நெருக்கடியை சமாளிக்க அவசியம்' என்று அறிக்கை வலியுறுத்துகிறது.

இஸ்ரேல் நடத்திய தாக்குதலில்

காசாவில் ஒரே நாளில் 115 பேர் பலி

காசா, மே 17-

இஸ்ரேலிய படைகள், வடக்கு காசாவில் உள்ள ஜபாலியா உள்ளிட்ட பகுதிகளில் தரைவழி மற்றும் வான்வழி தாக்குதல்களை தீவிரப்படுத்தியதோடு, ஆயிரக்கணக்கான பாலஸ்தீனர்களை அப்பகுதிகளை விட்டு வெளியேறுமாறு உத்தரவிட்டன. இந்த தாக்குதல்களில் பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட பலர் உயிரிழந்ததாகவும் கூறப்படுகிறது. இஸ்ரேல், வடக்கு காசாவில் தனது புதிய ராணுவ நடவடிக்கையான 'கிதியோனின் தேர்கள்' தொடங்கியதாக அறிவித்துள்ளது; இன்று அதிகாலை முதல் இதுவரை 115 பாலஸ்தீனர்களை கொன்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த தாக்குதல்களுக்கு பதிலளிக்கும் விதமாக, பாலஸ்தீன அமைப்புகள் சர்வதேச சமூகத்திடம் உடனடி நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியுள்ளன. சமூக ஊடகங்களில், இஸ்ரேலின் தாக்குதல்களை போர் குற்றங்கள் என்று கண்டித்து, இஸ்ரேல் மற்றும் அதற்கு ஆதரவளிக்கும் நிறுவனங்களுக்கு எதிராக பொருளாதார தடைகள் விதிக்க வேண்டும் என்று கோரிக்கைகள் எழுந்துள்ளன. இந்த மோதல், காசாவில் ஏற்கனவே மோசமடைந்த மனிதாபிமான நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்தியுள்ளதாகவும், உணவு, மருத்துவம் மற்றும் தங்குமிட பற்றாக்குறை மக்களை பெரிதும் பாதித்துள்ளதாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

அதிகாலை 2.30 மணிக்கு போன் போட்ட ராணுவ தளபதி

நூர்கான் விமான தளத்தை அட்டாக் பண்ணிட்டாங்க...

முதன் முறையாக ஒப்புக் கொண்ட பாக். பிரதமர்

இஸ்லாமாபாத், மே 17-

அதிகாலை 2.30 மணிக்கு போன் போட்ட ராணுவ தளபதி, நூர் கான் விமான தளம் தாக்கப்பட்டதாக தெரிவித்ததாக பாகிஸ்தான் பிரதமர் முதல்முறையாக ஒப்புக் கொண்டார்.

இந்தியாவின் ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையால் கதிகலங்கி இருக்கும் பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷரீப், இஸ்லாமாபாத்தில் நடந்த நிகழ்ச்சியில் பேசுகையில், 'இந்தியாவின் ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது, கடந்த 10ம் தேதி அதிகாலை 2.30 மணிக்கு ராவல்பிண்டியில் உள்ள நூர் கான் விமான தளம் உள்ளிட்ட பல இலக்குகளை இந்தியாவின் பாலிஸ்டிக் ஏவுகணைகள் தாக்கியது. பாகிஸ்தான் ராணுவ தலைமைத் தளபதி ஜெனரல் ஆசிம் முனீர், என்னை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு இந்த தாக்குதல்கள் குறித்து தெரிவித்தார்' என்று கூறினார். எப்போதும் இந்தியா குறித்து முரணான தகவல்களை தெரிவித்து வரும் பாகிஸ்தான் பிரதமர், முதன்முறையாக இந்திய ராணுவ நடவடிக்கையை அரிதிலும் அரிதாக ஒப்புக் கொண்டார். இதன்மூலம் இந்திய ராணுவத்தின் துல்லியமான தாக்குதல்களின் அளவையும், தாக்கத்தையும் வெளிப்படுத்தி உள்ளார். சமூக ஊடகங்களில் வைரலான பாகிஸ்தான் பிரதமர் ஷரீப்பின் வீடியோவுக்கு, இந்தியாவில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி தலைவர்கள் கடுமையான பதிலடி கொடுத்தனர். இதுகுறித்து பாஜக தகவல் தொழில்நுட்ப பிரிவு தலைவர் அமித் மால்வியா வெளியிட்ட பதிவில், 'பாகிஸ்தான் பிரதமரை நள்ளிரவில் எழுப்பி, இந்தியா தீவிரமாக தாக்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது ஆபரேஷன் சிந்தூரின் துல்லியத்தையும், வலிமையையும் காட்டுகிறது' என்று பதிவிட்டார். அதேபோல் உத்தவ் தாக்கரேவின் சிவசேனா கட்சி மூத்த தலைவர் பிரியங்கா சதுர்வேதி வெளியிட்ட பதிவில், 'பாகிஸ்தான் பிரதமர் ஷரீப்பின் ஒப்புதல் மிகவும் திருப்திகரமானதாக உள்ளது' என்று விமர்சித்துள்ளார்.

உண்மையில் சீன மற்றும் இந்திய நிறுவனங்களின் செயற்கைக்கோள் படங்கள், நூர் கான் விமான தளத்தில் ஓடுதளம் மற்றும் உள்கட்டமைப்புக்கு ஏற்பட்ட கடுமையான சேதத்தை உறுதிப்படுத்தியுள்ளன. இது இந்தியாவின் உறுதியான பதிலடியை மேலும் வலுப்படுத்துகிறது என்று சமூக ஊடகங்களில் பலரும் கருத்துகளை தெரிவித்து வருகின்றனர்.

இந்தியாவின் பாலிஸ்டிக் ஏவுகணையால் நிலைகுலைந்த நூர் கான் விமான தளம்.



ஷெபாஸ் ஷரீப்

இந்தியாவில் 93 பேருக்கு தொற்று

ஆசியாவில் புதிய கொரோனா அலை

சுகாதார அமைப்புகள் முன்னெச்சரிக்கை

சிங்கப்பூர், மே 17-

இந்தியாவில் 93 பேருக்கு தொற்று பதிவாகி உள்ள நிலையில் ஆசியாவில் புதிய கொரோனா அலை ஏற்பட்டுள்ளதால், சுகாதார அமைப்புகள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துள்ளன.

உலகளாவிய கொரோனா தொற்று பரவல் அடங்கி 3 ஆண்டுகள் முடிந்த நிலையில், தற்போது ஆசியா கண்டத்தில் கோவிட்-19 (கொரோனா) பாதிப்புகள் மீண்டும் அதிகரித்து வருவதாக சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். குறிப்பாக, ஹாங்காங் மற்றும் சிங்கப்பூரில் தொற்று எண்ணிக்கை கடுமையாக உயர்ந்துள்ளது. ஹாங்காங்கில், மே 3 வரையிலான வாரத்தில் 31 கடுமையான நோய்த்தொற்று பதிவாகியுள்ளன, இது கடந்த ஓர் ஆண்டில் மிக உயர்ந்த எண்ணிக்கையாகும். மேலும், சாக்கடை நீரில் வைரஸின் அளவு அதிகரித்து வருவதால், மருத்துவமனைகளில் நோயாளிகள் எண்ணிக்கை உயர்ந்து வருவதாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. சிங்கப்பூரில், அதே வாரத்தில் 28% உயர்வுடன் 14,200 புதிய தொற்றுகள் பதிவாகியுள்ளன. மருத்துவமனைகளில் நோயாளிகளின் எண்ணிக்கையும் 30% அதிகரித்துள்ளன. இந்த உயர்வு மக்களின் நோய் எதிர்ப்பு சக்தி குறைவதால் ஏற்பட்டிருக்கலாம் என்று சுகாதார அமைச்சகம் கூறியுள்ளது. ஆனால் புதிய வைரஸ் வகைகள் மிகவும் தொற்றக்கூடியவை அல்ல என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய கொரோனா அலை, கோவிட்-19 தொற்று பொது சுகாதார அச்சுறுத்தலாக உள்ளதை நினைவூட்டுகிறது. சீனாவில் கடந்த 4 வரையிலான ஐந்து வாரங்களில் மருத்துவமனைகளில் பரிசோதனை நேர்மறை விகிதங்கள் இரு மடங்காக உயர்ந்துள்ளன. தாய்லாந்தில் ஏப்ரல் மாத சோங்ரான் திருவிழாவைத் தொடர்ந்து இரண்டு ஊர்களில் தொற்று பரவல்கள் பதிவாகியுள்ளன.

ஆசியாவில் பல மாதங்களாக அவ்வப்போது தொற்று அலைகள் மீண்டும் எழுந்து வருகின்றன. இந்தியாவில் தற்போது 93 பேருக்கு கொரோனா தொற்று பதிவாகி உள்ளது. இருந்தும் கொரோனா புதிய அலை எதுவும் இதுவரை பதிவாகவில்லை என்றும், சுகாதார வல்லுநர்கள், தடுப்பூசிகளை புதுப்பித்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பின்பற்றுமாறு அறிவுறுத்துகின்றனர்.

புகழ்பெற்ற இந்திய வம்சாவளி எழுத்தாளர்

சல்மான் ருஷ்டியை கத்தியால் குத்திய நபருக்கு 25 ஆண்டு சிறை

நியூயார்க், மே 17-

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஆங்கிலோ - அமெரிக்க எழுத்தாளர் சல்மான் ருஷ்டி, கடந்த 1947ம் ஆண்டு மும்பையில் பிறந்தவர் ஆவார். 'மிட்நைட்ஸ் சில்ட்ரன்' (1981), 'தி சாத்தானிக் வெர்சஸ்' (1988) போன்ற உலக புகழ் பெற்ற நாவல்களை எழுதியுள்ளார். 'மிட்நைட்ஸ் சில்ட்ரன்' என்ற நாவலுக்கு புக்கர் பரிசு கிடைத்தது. ஆனால் 'தி சாத்தானிக் வெர்சஸ்' என்ற நாவல் இஸ்லாமிய உலகில் சர்ச்சையை ஏற்படுத்தியதால், கடந்த 1989ல் ஈரானின் அயதுல்லா கோமெய்னி அவருக்கு எதிராக மரண தண்டனை உத்தரவு பிறப்பித்தார். இதனால் சல்மான் ருஷ்டி பல ஆண்டுகள் திரை மறைவு வாழ்க்கை வாழ்ந்தார். கடந்த 2022ல் நியூயார்க்கில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற அவரை, நியூஜெர்சியை சேர்ந்த ஹாதி மாதர் என்பவர் கத்தியால் குத்தினார். அதனால் அவருக்கு கழுத்து, மார்பு, கை மற்றும் கல்லீரலில் கடுமையான காயங்கள் ஏற்பட்டன. கத்தியால் குத்திய ஹாதி மாதருக்கு எதிராக தீவிரவாதம் தொடர்பான குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டன. இவ்வழக்கின் தீர்ப்பு தற்போது வெளியாகி உள்ளது. புகழ்பெற்ற எழுத்தாளர் சல்மான் ருஷ்டியை கத்தியால் குத்திய குற்றவாளி ஹாதி மாதருக்கு 25 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. மேலும், மேடையில் இருந்த மற்றொரு நபரை காயப்படுத்தியதற்காக கூடுதலாக ஏழு ஆண்டுகள் ஹாதி மாதருக்கு நீதிமன்றம் தண்டனை விதித்துள்ளது.

நியூயார்க் நீதிமன்றம் தீர்ப்பு

சல்மான் ருஷ்டி

பாகிஸ்தானுக்கு ஆதரவளித்ததால் திடீர் அனுமதி ரத்து

டெல்லி ஐகோர்ட்டில் துருக்கி நிறுவனம் முறையீடு

ஒன்றிய அரசின் முடிவால் பரபரப்பு

புதுடெல்லி, மே 17-

இந்தியாவில் விமான நிலைய தரைவழி சேவைகளை வழங்கி வரும் துருக்கி நிறுவனமான செலிபி-யின் பாதுகாப்பு அனுமதியை ஒன்றிய அரசு ரத்து செய்துள்ளதால், அந்த நிறுவனம் டெல்லி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளது.

சமீபத்திய இந்தியா-பாகிஸ்தான் இடையிலான மோதலின் போது, துருக்கி நாடானது பாகிஸ்தானுக்கு ஆதரவான நிலைப்பாட்டை எடுத்தது. துருக்கியின் இந்த செயல், இந்திய மக்களிடையே கோபத்தை ஏற்படுத்தியது. தேசிய பாதுகாப்பு காரணங்களை மேற்கோள் காட்டி, இந்தியாவில் விமான நிலைய தரைவழி சேவைகளை வழங்கி வரும் துருக்கி நிறுவனமான செலிபி-யின் பாதுகாப்பு அனுமதியை ஒன்றிய அரசு ரத்து செய்தது.

இந்நிலையில் தனது பாதுகாப்பு அனுமதியை ஒன்றிய அரசு ரத்து செய்த முடிவை எதிர்த்து டெல்லி உயர் நீதிமன்றத்தில் செலிபி வழக்கு தொடர்ந்துள்ளது. அந்த மனுவில், 'தேசிய பாதுகாப்பு என்ற குறிப்புடன் எங்களது பாதுகாப்பு அனுமதியை ஒன்றிய அரசு ரத்து செய்துள்ளது. எவ்வாறு அச்சுறுத்தல் உள்ளது என்பது குறித்து விளக்கவில்லை. எனவே ஒன்றிய அரசின் முடிவை சட்டப்படி ரத்து செய்ய வேண்டும். மேலும் ஒன்றிய அரசு எடுத்துள்ள முடிவால், 3,791 பேரின் வேலைகளையும், முதலீட்டாளர் நம்பிக்கையையும் பாதிக்கும்' என்று நிறுவனம் கூறியுள்ளது. செலிபி நிறுவனத்தின் பங்குதாரர்கள் துருக்கியில் பதிவு செய்யப்பட்டிருந்தாலும், நிறுவனத்தின் பெரும்பான்மை கட்டுப்பாடுகள் துருக்கி அல்லாத சர்வதேச நிறுவனங்களிடம் உள்ளதாகவும், இந்தியாவில் தனது செயல்பாடுகள் இந்திய தொழில்முறை வல்லுநர்களால் நிர்வகிக்கப்படுவதாகவும், எந்தவொரு வெளிநாட்டு அரசு அல்லது தனிநபர்களுடனும் அரசியல் தொடர்பு இல்லை என்றும் தெரிவித்துள்ளது.

> இந்தியாவின் ராஜதந்திர மற்றும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு மத்தியில் ஒன்றிய அரசின் முடிவு, துருக்கி - இந்திய உறவுகளில் மேலும் பதற்றத்தை ஏற்படுத்தலாம்.

டெல்லி விமான நிலையம், செலிபியுடனான தனது தரைவழி மற்றும் சரக்கு சேவைகளை முறித்துக்கொண்டதாக அறிவித்துள்ளது. எனவே தற்போது செலிபி தொடர்ந்துள்ள வழக்கு வரும் 19ம் தேதி விசாரணைக்கு வர உள்ளது. இந்தியாவின் ராஜதந்திர மற்றும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு மத்தியில் ஒன்றிய அரசின் முடிவு, துருக்கி - இந்திய உறவுகளில் மேலும் பதற்றத்தை ஏற்படுத்தலாம் என்கின்றனர்.

அமிர்தாஞ்சன் ஹெல்த் கேர் லிமிடெட்

பதிவு அலுவலகம்: எண். 103, (பழைய எண். 42–45), லஸ் சர்ச் ரோடு, மயிலாப்பூர், சென்னை–600 004.
email id : investors@amrutanjan.com | Website : www.amrutanjan.com | CIN:L24231TN1936PLC000017

31 மார்ச் 2025–ல் முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளின் சுருக்கம்

(ஒரு பங்கு சம்பாத்தியம் தவிர, ரூ. லட்சத்தில்)

விவரங்கள்	முடிந்த காலாண்டு			முடிந்த ஆண்டு	
	31 மார்ச் 25 (தணிக்கையானது - குறிப்பு 3ஐ பார்க்க)	31 டிசம்பர் 24 (தணிக்கை செய்யாதது)	31 மார்ச் 24 (தணிக்கையானது - குறிப்பு 3ஐ பார்க்க)	31 மார்ச் 25 (தணிக்கை யானது)	31 மார்ச் 24 (தணிக்கை யானது)
செயல்பாடுகளிலிருந்து மொத்த வருவாய்	13,541.36	12,275.15	12,706.22	45,181.63	42,123.05
காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (வரி, விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு முன்)	2,085.57	2,598.92	1,960.45	6,913.40	6,194.60
வரிக்கு முன் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	2,085.57	2,598.92	1,960.45	6,913.40	6,194.60
வரிக்கு பின் காலத்திற்கான நிகர லாபம்/(நஷ்டம்) (விலக்கு மற்றும்/அல்லது அசாதாரண அயிட்டங்களுக்கு பின்)	1,517.78	1,924.57	1,365.90	5,083.47	4,497.26
காலத்திற்கான மொத்த விரிவான வருவாய் [காலத்திற்கான (வரிக்கு பின்) லாபம்/(நஷ்டம்) மற்றும் இதர விரிவான வருவாயை (வரிக்கு பின்) உள்ளடக்கியது]	1,513.70	1,882.24	1,382.78	5,004.25	4,512.31
சம பங்கு மூலதனம்	289.11	289.11	289.11	289.11	289.11
இருப்பு (மறுமதிப்பீட்டு இருப்பு நீங்கலாக)	32,372.35 (31-03-2025 அன்று)	28,559.72 (31-03-2024 அன்று)	28,559.72 (31-03-2024 அன்று)	32,372.35 (31-03-2025 அன்று)	28,559.72 (31-03-2024 அன்று)
ஒரு பங்கு சம்பாத்தியம் (ஒவ்வொன்றும் ரூ.1/–) அடிப்படை பலமிழந்தது	5.25 5.25 (வருடாந்திரமல்ல)	6.66 6.66 (வருடாந்திரமல்ல)	4.72 4.72 (வருடாந்திரமல்ல)	17.58 17.58 (வருடாந்திரம்)	15.50 15.50 (வருடாந்திரம்)

குறிப்பு:

1. செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015, விதி 33ன் கீழ் ஸ்டாக் எக்சேஞ்சுகளில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளின் விரிவான வடிவத்தின் சுருக்கமாக மேற்கண்டவை உள்ளது. காலாண்டு மற்றும் ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளின் முழு வடிவம் ஸ்டாக் எக்சேஞ்ச் இணையதளம் www.bseindia.com மற்றும் www.nseindia.com மற்றும் கம்பெனியின் இணையதளம் www.amrutanjan.com–ல் கிடைக்கும்.
2. மார்ச், 2025ல் முடிந்த காலாண்டு மற்றும் ஆண்டுக்கான மேற்கண்ட நிதிநிலை முடிவுகள் முறையே அமிர்தாஞ்சன் ஹெல்த் கேர் லிமிடெட்டின் (''கம்பெனி'') தணிக்கை குழுவால் மறுபரிசீலனை செய்யப்பட்டு 15 மே, 2025 அன்று நடைபெற்ற கம்பெனியின் இயக்குனர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. சட்டப்பூர்வ தணிக்கையாளர்கள் மேற்கண்ட முடிவுகளைத் தணிக்கை செய்து, மாற்றப்படாத கருத்தை வெளியிட்டுள்ளனர்.
3. 31 மார்ச் 2025 மற்றும் 31 மார்ச் 2024 ஆகிய தேதிகளில் முடிவடைந்த காலாண்டுகளின் புள்ளிவிவரங்கள், முழு நிதியாண்டுகளைப் பொறுத்தமட்டில் தணிக்கை செய்யப்பட்ட புள்ளிவிவரங்களுக்கிடையேயான சமநிலை புள்ளிவிவரங்கள் மற்றும் தொடர்புடைய நிதியாண்டின் மூன்றாம் காலாண்டு இறுதி வரை வெளியிடப்பட்ட தணிக்கை செய்யப்படாத ஆண்டு முதல் தேதி வரையிலான புள்ளிவிவரங்கள் ஆகும். இது வரையறுக்கப்பட்ட மதிப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

இடம் :சென்னை
தேதி : 15 மே 2025

அமிர்தாஞ்சன் ஹெல்த் கேர் லிமிடெட்
ஒப்பம்/–
S. சாம்பு பிரசாத்
தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர்